# ஐக்கியநிலைக்கு பின் தொடரும் பயணம்:

## நீரானது, தான் ஹைட்ரஜனாக இருந்ததை மறந்துவிடும் போது



## பூஜ்ய தாஜி அவர்களின்

70வது பிறந்த நாளை முன்னிட்டு வழங்கப்பட்ட அருட்செய்தி

28 செப்டம்பர் 2025, கான்ஹா சாந்தி வனம்

# ஐக்கியநிலைக்கு பின் தொடரும் பயணம்:

## நீரானது, தான் ஹைட்ரஜனாக இருந்ததை மறந்துவிடும் போது



அன்பானவர்களே,

பெரும்பாலானவர்கள் வீடுபேறு அல்லது நிர்வாணா எனும் நிலையே ஆன்மீக வளர்ச்சியின் உச்சம் என நம்புகின்றனர். அது, பேராசை, வெறுப்பு, ஆணவம் மற்றும் அறியாமை என்னும் தீயை அணைத்துவிடுவதாகும். அதை, துன்பம் மற்றும் மரணம் என்ற சுழற்சியின் முடிவு என்றும், வீடுபேற்றின் உச்சநிலை என்றும் கருதுகின்றனர்.

பின்னர், மகான் கபீர் கூறியதின் அடிப்படையில், நமது அகங்காரம் தன் ஆதிக்கத்தை மட்டுப்படுத்த கற்றுக்கொண்டபின், ஐக்கியநிலையை அடைவதற்கான சாத்தியக்கூறு பற்றி, நாம் சற்றே புரிந்துகொள்ளத் தொடங்குகிறோம். மகான் கபீர், இது மிக எளிதானது என்பது போல் எடுத்துரைக்கிறார். அவர், ஐக்கியமடைதல் எனும் நிலையானது, மழைத்துளிகள் சமுத்திரத்தில் விழுவதைப் போன்றது என்றும், சமுத்திரமாக மாறுவது எவ்வாறு இருக்கும் என்பதை விவரிப்பதற்கு ஒரு நீர்த்துளிகூட எஞ்சியிருக்கவில்லை என்றும் கூறுகிறார்.

“ஐக்கிய நிலையை நீங்கள் அடையும்போதுதான், ‘தொடக்கநிலையில் உள்ளவர்’ என உங்களை முடிவாக அழைக்க இயலும்” என்ற பாபூஜியின் அதிர்ச்சி தரும் கூற்று, நமக்குத் தெரியும் என நாம் எண்ணிய அனைத்தையும்

தலைகீழாக மாற்றிவிடுகிறது. பயணத்தின் எல்லை என்று நாம் நினைத்திருந்தது, உண்மையான யாத்திரை தொடங்குவதற்கு நம்மை உண்மையில் தயார்படுத்துகிறது.

வேறுவிதமாக சொல்வதெனில், ஒரு இசைக்கலைஞர் தனது இசைக்கருவியை எவ்வாறு வாசிக்க வேண்டுமென கற்றுக்கொள்வதற்கு, பல ஆண்டுகள் எடுத்துக்கொள்கிறார். அதில் அவர் முழுமையாக ஆளுமை பெற்ற பின்னர்தான், அவரால் புதிய படைப்புகளை உருவாக்கத் தொடங்க இயலும். பின்னர், அவருக்கும் அவரது இசைக்கும் எந்த வேறுபாடும் இருக்காது. நுணுக்கங்கள் தூய வெளிப்பாடுகளுக்கு வழிவகுக்கின்றன.

இப்போது கேள்வி என்னவெனில்: இசைக்கலைஞர் மற்றும் இசை, இவற்றின் ஒன்றிணைதலுக்கு அப்பால் இருப்பது என்ன? இசைகள் அனைத்தும் பிறக்கின்ற, பின் அதனுள்ளே மறைந்துவிடுகின்ற, நிசப்தம்தான் அது. அந்த நிசப்தம் வெறுமையானது அல்ல, ஆனால் மெல்லிசை ஒவ்வொன்றும் பிறப்பதற்கான முழுமையான சாத்தியம் நிறைந்ததாகும். ஸ்வரங்களுக்கு இடைப்பட்ட அந்த இடைவெளியில்தான், மகத்தான இசை இசைக்கப்படுகிறது என்பதை, நிபுணத்துவம் பெற்ற ஒரு இசைக்கலைஞர் நன்கு அறிவார்.



"ஐக்கிய நிலையை நீங்கள் அடையும் போதுதான், 'தொடக்கநிலையில் உள்ளவர்' என உங்களை முடிவாக அழைக்க இயலும்"

- பாபூஜி

ஐக்கியம் என்பது பற்றியும், அதற்குபின் நிகழ்வது என்ன என்பது பற்றியும் காண்போம்.

முதலில், அதை யார் அடைய விரும்புகிறார் என்பதை நாம் அறிந்துகொள்ள வேண்டும். மேலும், தேடல்

நிறைவடைந்துவிட்டது என்பதை அறிந்திட, அங்கு எஞ்சியிருக்கப்போவது யார்? "நான் சமுத்திரமாக மாறிவிட்டேன்!" என்ற நீர்த்துளியின் பிரகடனம், ஐக்கியமடைதல் இன்னும் நிகழவில்லை என்பதைக் காட்டுகிறது. உண்மையான ஐக்கியநிலையில், அவ்வாறு பிரகடனம் செய்வதற்கு, அங்கு "நான்" என்ற ஒன்று இருக்காது. மேலும், தான் வேறுபட்டு இருப்பதைக் காண்பதற்கு, அங்கு சத்துவம் எதுவும் எஞ்சியிருக்காது. "இப்போது நான்தான் சமுத்திரம்" என்று நீர்த்துளியால் கூற முடியாது. ஏனெனில், அதை சொல்லக் கூடிய "நான்" இனியும் அங்கில்லை. நாம் அறிந்ததைப்போல் இது இறப்பு அல்ல; அது மாபெரும் மாற்றமாகும். இறப்புகூட நித்தியமான ஜீவிதத்தை நோக்கி இட்டுச்செல்லக் கூடும்.

ஒரு கணம் இதைப் பற்றி சிந்தியுங்கள்: "சமுத்திரநிலையை அனுபவிப்பவர் யார்" எனக் கேள்வி எழுப்பிய அந்த நீர்த்துளி, இனியும் அங்கு இல்லை. இது, "காட்டுத் தீயில் இணைந்துவிட்ட மெழுகுவர்த்தியின் ஒளிச்சுடர் என்ன நினைக்கும்?" என்று கேட்பதைப் போன்றது. இந்தக் கேள்வி, உயிருடன் இல்லாத ஒன்று சிந்திப்பதுபோல புனையப்பட்டுள்ளது.

இயற்கை, இந்த மகத்தான ரகசியத்தை, மிக சாதாரண விஷயங்களின் வழியாக நமக்கு எடுத்துக்காட்டுகின்றது. ஹைட்ரஜனை உதாரணமாக எடுத்துக்கொள்ளுங்கள்: அது வெடிக்கும் தன்மை கொண்டது, ஆபத்தானது, எளிதில் தீப்பற்றக் கூடியது. ஆக்ஸிஜன், நெருப்பிற்கு ஆற்றல் அளித்து, அதன் தீவிரத்தை அதிகரிக்கிறது. அவை தமக்கே உரிய தன்மைகளுடன், சிக்கல் ஏற்படுத்தக் கூடியவையாக உள்ளன. ஆனால் அவை சரியான விகிதத்தில் ஒன்றாக சேர்ந்திடும்போது என்ன நடக்கிறது? அனைத்தையும் இயங்கச் செய்கின்ற, உயிர்கள் அனைத்திற்கும் அடிப்படையான, நீராக மாறுகின்றன!

இப்போது கவனமாகக் கேளுங்கள். ஹைட்ரஜன் மற்றும் ஆக்ஸிஜனுக்கு என்ன நேர்ந்தது? அவை அழிக்கப்படவில்லை; அவை கற்பனைகூட செய்து பார்த்திராத வேறொன்றாக மாறிவிட்டன. “இப்போது நான் நீராக இருக்கிறேன்” என ஹைட்ரஜன் கூற முடியாது. ஏனெனில் அவ்வாறு கூறியதை உறுதிசெய்வதற்கு, அதன் தூய நிலையில் ஹைட்ரஜன் அங்கில்லை. அந்த மூலக்கூறுகள் இரண்டில் இருந்தும் வேறுபட்டதாகவும், மேலும் வேறுபட்ட ஒரு நோக்கத்திற்காகவும் புதிய நிதர்சனம் ஒன்று தோன்றியுள்ளது.

மேலும் குளோரின் மற்றும் சோடியம் விளைவிக்கக் கூடிய வியத்தகு விஷயங்கள் அனைத்தையும் பற்றித் தெரிந்துகொள்ளுங்கள். குளோரின் என்பது போரில் பயன்படுத்தப்படும் ஒரு விஷ வாயு. சோடியம் நீருடன் சேரும்போது, அது வெடிக்கும் தன்மை கொண்டதாகிறது. ஆனால் இவை இரண்டும் ஒன்று சேரும்போது, அவை நமது செல்களுக்கு மிகவும் இன்றியமையாத உப்பாக மாறுகின்றன. உயிருக்கு ஆபத்தை விளைவிக்கக் கூடிய ஒன்று, இப்போது அத்தியாவசியமானதாக மாறியுள்ளது. விஷத்தன்மை கொண்ட ஒன்று, பாதுகாப்பான ஒன்றாக மாறியுள்ளது.

நதி சமுத்திரத்தைச் சென்றடைவதும், மழைத்துளி சமுத்திரத்தில் விழுவதும், ஹைட்ரஜன் ஆக்ஸிஜனுடன் இணைவதும், இவை யாவும் ஒன்றிணைதல் எனும் நோக்கத்திற்கான வழிகளாகும். ஐக்கியம் என்பது இரண்டு விஷயங்களை இணைப்பது பற்றியது மட்டுமல்ல என்பதை இது எடுத்துக்காட்டுகிறது. அது, புதிதான மற்றும் பயன்நிறைந்த ஒன்றை உருவாக்குவதைப் பற்றியது. அது, ஒரு மகத்தான நோக்கத்திற்காக, அனைவருக்கும் உதவக் கூடிய ஒரு புதிய விஷயத்தை உருவாக்குவதற்காக, தனது பழைய அடையாளங்களை விட்டுவிடுவது பற்றியது.

ஒரு உன்னத ஐக்கியம் என்பது, முற்றிலும் புதிதான ஒன்றைப் பெறுவதற்காக, இரண்டு விஷயங்கள் ஒன்று சேர்வதைப் போன்றதாகும், உதாரணத்திற்கு ஹைட்ரஜனும் ஆக்ஸிஜனும் சேர்ந்து நீர் உருவாவதைப் போன்றது. அவை வெறுமனே ஒன்றாக சேர்வது மட்டுமல்ல, அவை மாற்றமடைகின்றன.

- **ஒரு மகத்தான காரணத்திற்காக தன்னை இழத்தல்:** இது, ஒன்று மற்றொன்றின் மீது ஆதிக்கம் செலுத்துவது பற்றியது அல்ல. இது, இரண்டு சத்துவங்களும் தங்களுக்கான அடையாளங்களை விட்டுவிட்டு, புதிய மற்றும் உயர்வான நோக்கத்திற்காக இணைவதைப் பற்றியதாகும். நிறைவுபெற்றவராக நீங்கள் உணர்வதற்கு, எதையேனும் விட்டுவிடுகிறீர்கள் என்பதாக இதை எண்ணிப் பாருங்கள்.
- **தன்னிலை மாற்றம், வெறும் கலவை மட்டும் அல்ல:** ஒரு புதிய வண்ணத்தைப் பெறுவதற்காக, இரண்டு வண்ணச் சாயங்களை ஒன்றாகக் கலப்பது ஒரு சாதாரண ஐக்கியம் ஆகும். அதே நேரம், ஒரு உன்னத ஐக்கியம் என்பது, முற்றிலும் புதிதான ஒன்றைப் பெறுவதற்காக, இரண்டு விஷயங்கள் ஒன்று சேர்வதைப் போன்றதாகும், உதாரணத்திற்கு ஹைட்ரஜனும் ஆக்ஸிஜனும் சேர்ந்து நீர் உருவாவதைப் போன்றது. அவை வெறுமனே ஒன்றாக சேர்வது மட்டுமல்ல, அவை மாற்றமடைகின்றன.
- **எதிர்பாரா விளைவு:** மூல சத்துவங்கள் இரண்டும், தாமாக செய்ய இயலாததை, உன்னத சத்துவத்தினால் செய்ய இயலும். அந்தப் புதிய சத்துவம், ஐக்கியமாவதற்கு முன்பு தன்னிடம் இல்லாத புதிய திறன்களை, புதிய மனதை அல்லது புதிய இலக்கை கொண்டதாக இருக்கும்.


ஐக்கியமடைதல் என்பது ஒரு தொடக்கம் மட்டுமே, என்று பாபூஜி கூறியபோது, மக்கள் பலரும் அதிர்ச்சியுற்றனர். அவர்கள், "மாஸ்டர், ஒன்றிணைதல் என்பது முடிவல்ல எனில் அதற்குப் பின் நிகழ்வது என்ன?" என்று கேட்டனர்.

எனது அனுபவத்திலிருந்து நான் கற்றுக்கொண்டது இதுதான்:

முதலில் வருவது ஐக்கியமடையும் நிலை, இது சமுத்திரம், இருகரம் நீட்டி நதியை வரவேற்பதைப் போன்றது. மங்கலாக இருப்பினும், தான் ஒரு நதி என்ற நினைவு அதற்கு இன்னும் உள்ளது. நதியின் இந்த ஓட்டம், *ஸாலோக்யதா* என்பதற்காக, அதாவது அதற்கு உரித்தான இடத்தை அடைவதற்காக என்பதை அறிந்துகொள்ளுங்கள்.

ஐக்கியநிலையில் ஆளுமை பெற்ற பின்னர், ஒத்தநிலையை நாம் அடைகிறோம், அப்போது வேறுபட்டவராக இருக்கிறோம் என்ற நினைவுகூட மறைந்துவிடுகிறது. சோடியம், தான் சோடியம் என்பதையே மறந்துவிடுகிறது. அது இப்போது வெறும் உப்புதான். அது வெடிக்கும் தன்மை கொண்டதாக மீண்டும் மாற விரும்புவதில்லை.

பூரணமாக ஒன்றிணைவதற்கு இது போதுமானது அல்ல. இப்போது நமது தனிப்பட்ட "விருப்பம்" மறைந்து, அங்கு தெய்வீக சித்தம் எவ்வித தடையும் அல்லது விழிப்புணர்வும் இன்றி பாய்கிறது. அங்கு பூரண ஒத்திசைவு ஏற்படுகிறது.



ஐக்கியநிலையைக் கடந்து நிற்கும் தன்னிலை உணர்ந்த ஒருவர், "நான் அகஒளி பெற்றுவிட்டேன்" என்று அனைவரிடமும் கூறிக்கொண்டிருக்க மாட்டார். நீர் "நான் $H_2O$" என்று கூறத் தேவையில்லை. அது பாய்ந்தோடுகிறது, பசியாற்றுகிறது, சுத்திகரிக்கிறது, உறுதுணை புரிகிறது. அதன் இருப்பே அதற்கான பிரகடனமாகும்.

அது எதையும் விலக்குவதில்லை, ஆகாயத்தைப் போல அனைத்தையும் பற்றிக்கொள்கிறது.

இதற்கு மேலும்... அதை வார்த்தைகளால் விவரிப்பது கடினம்! உயிரினங்கள்மீது அக்கறை கொள்வது பற்றி, நீரினால் எவ்வாறு ஹைட்ரஜன் மற்றும் ஆக்ஸிஜனிடம் கூற முடியும்? உணவை புதிதாக வைத்திருப்பதிலும், இரத்தத்தின் மென்மையான சமநிலையைப் பராமரிப்பதிலும் கிடைக்கின்ற மகிழ்ச்சியை, உப்பு எவ்வாறு சோடியம் மற்றும் குளோரினிடம் எடுத்துக்கூற முடியும்?

மேற்கத்திய தத்துவம் "வெறுமை" என்பதை அச்சமூட்டும் வெற்றுநிலை என்று அழைக்கின்றது. ஆனால் அது மிகவும் முனைப்புடன் இருக்கின்ற முழுமைநிலை என்பதை நாம் அறிவோம். ஹைட்ரஜன் மற்றும் ஆக்ஸிஜன் ஒன்றாகக் கலந்து, நீரை உருவாக்கும்போது, அவை ஒன்றுமற்றதாக மாறுகின்றனவா? இல்லை! அவை சுற்றுச்சூழல் அமைப்பு முழுமைக்கும் உதவுகின்றன. அது போலவே ஐக்கியநிலையை அடைந்த பின்னர், அகங்காரமற்ற நிலை அவ்வாறுதான் இருக்கும். அது வெறுமை இல்லை; அது தன்னை வெளிக்காட்டிக்கொள்ள வேண்டிய அவசியமில்லாத அளவிற்கு நிறைவாக இருக்கும்.

ஐக்கியநிலையைக் கடந்து நிற்கும் தன்னிலை உணர்ந்த ஒருவர், "நான் அகஒளி பெற்றுவிட்டேன்" என்று அனைவரிடமும் கூறிக்கொண்டிருக்க மாட்டார். நீர் "நான் $H_2O$" என்று கூறத் தேவையில்லை. அது பாய்ந்தோடுகிறது, பசியாற்றுகிறது, சுத்திகரிக்கிறது, உறுதுணை புரிகிறது. அதன் இருப்பே அதற்கான பிரகடனமாகும்.

இப்போது, சிந்திக்க வேண்டிய விஷயம் ஒன்று உள்ளது: சமுத்திரமாக மாறுவது இலக்கு அல்ல. நீங்கள் ஒருபோதும் ஒரு துளி அல்ல என்பதை உணர்வதுதான் முக்கியம். தன்னை ஒரு துளி என்று எண்ணியிருந்த நீங்கள் எப்போதும் அந்த சமுத்திரமாகவே இருந்தீர்கள். ஆனால் இந்தப் புரிதல்

மட்டுமே முடிவல்ல, அது உண்மையான மாற்றத்திற்கான ஒரு தொடக்கம்தான்.

நீங்கள் சமுத்திரம்தான் என்பதை உணர்ந்ததும், மீண்டும் உங்களை ஒரு துளியாக எவ்வாறு விழிப்புடன் கற்பனை செய்துகொள்வது என்று நீங்கள் கற்றுக்கொள்ள வேண்டும். இம்முறை, அதை அறியாமையினால் அன்றி, அதிஉன்னத அறிவினால் செய்ய வேண்டும். இதுதான் கட்டுண்டு இருப்பதிலிருந்து, விடுபட்டிருக்கும் ஆன்மாவை வேறுபடுத்திக் காட்டுகிறது. ஒருவர், தான் காண்கின்றவற்றை நம்புகின்ற அதே வேளையில், பிறர் தொடர்ந்து கனவு காண்பதற்காக, ஒரு நோக்கத்துடன் மற்றொருவர் தன் கடமையை ஆற்றுகிறார். பாபூஜி, "நான் பேசும்போது, லாலாஜியா, நானா அல்லது வேறு யாராவது பேசுகிறார்களா என எப்போதும் நான் வியப்பதுண்டு"



நீரைப் போல் இருங்கள். யாருக்கு உதவ வேண்டும் என்று நீர் தேர்ந்தெடுப்பதில்லை. அது, "நான் தங்கத்தினாலான வழித்தடங்களில் மட்டுமே பாய்ந்தோடுவேன்" என்று கூறுவதில்லை. அது உள்ளபடியே இருக்கும், ஆனால் ஒவ்வொரு கொள்கலனிற்கு ஏற்றாற்போல் தன்னை மாற்றிக்கொள்ளும்.

என்று கூறுவார். இவை எல்லாவற்றிலிருந்தும் ஒன்றை மட்டும் நிச்சயமாகக் கூறலாம். அது என்னவெனில், 'நான் என்ற உணர்வு' மறைந்துவிடுகிறது.

"இவை சிறந்த கருத்துகள்தான், ஆனால் நான் ஒவ்வொரு நாளும் போக்குவரத்து நெரிசல்களையும், வேறுசில பிரச்சினைகளையும் இன்னும் கையாள வேண்டியுள்ளதே" என்று நீங்கள் எண்ணக் கூடும். அதுதான் கவனிக்க வேண்டிய விஷயம். சமுத்திரம், எல்லையற்றதில் தன்னை

நிலைநிறுத்திக் கொண்டிருக்கும் அதே வேளையில், தனது இருப்பின் வரம்புகள் பற்றிய முழுமையான விழிப்புணர்வுடன், தன்னை ஒரு துளியாக உணர்வதற்கு கற்றுக்கொள்ள வேண்டும்.

"ஆனால் தாஜி, நிஜ வாழ்வில் இதை நாங்கள் எவ்வாறு செய்வது?" என நீங்கள் கேட்கக் கூடும்.

நீரைப் போல் இருங்கள். யாருக்கு உதவ வேண்டும் என்று நீர் தேர்ந்தெடுப்பதில்லை. அது, "நான் தங்கத்தினாலான வழித்தடங்களில் மட்டுமே பாய்ந்தோடுவேன்" என்று கூறுவதில்லை. அது உள்ளபடியே இருக்கும், ஆனால் ஒவ்வொரு கொள்கலனிற்கு ஏற்றாற்போல் தன்னை மாற்றிக்கொள்ளும். அதை சூடேற்றும்போது, எந்த பிரச்சனையுமின்றி அது நீராவியாக மாறுகிறது. குளிரச் செய்யும்போது, அது எளிதாக உறைந்துவிடுகிறது. ஆனால் வாழ்க்கையை தொடர்ந்து முன்னோக்கி எடுத்துச் செல்லும் விதமாக, இத்தனை மாற்றங்களுக்கு உட்படுகின்ற போதிலும், உண்மையில் தான் யார் என்பதை அது ஒருபோதும் மறப்பதில்லை.

சோடியம் உங்களுக்கு கற்பித்தவற்றை எப்போதும் நினைவில் கொள்ளுங்கள். வாழ்க்கைக்கு மிகவும் அத்தியாவசியமான நீர்கூட, தவறான மூலக்கூறுடன் ஒன்று சேரும்போது, தீங்கு விளைவிப்பதாக மாறிவிடக் கூடும். ஆன்மீகப் பயணத்திற்கு, நீரைப் போன்று அனுசரனையும் மற்றும் நமது மாற்றத்திற்கு உதவக் கூடிய சரியான நபரை தேர்ந்தெடுப்பதற்கான அறிவும் அவசியமாகும். இதே கொள்கைதான் திருமண பந்தத்திலும் எதிரொலிக்கிறது. சோடியம், குளோரினுடன் ஒன்றுகலப்பதற்கு பதிலாக, நீருடன் கலந்தால் என்ன நேரும் என எண்ணிப் பாருங்கள்! வெடித்துவிடும்...

ஐக்கியநிலைக்குப் பின் நிகழ்வது என்ன? நீர் எனும் நிலையைத் தாண்டி, அது மாற்றமடையக் கூடிய

மற்றும் செய்யக் கூடிய விஷயங்கள் பல - உங்களை பிரமிக்கவைக்கும் மிக அழகான பனிச்சிற்பங்கள், பிரம்மாண்டமான இயந்திரங்களை இயக்கும் நீராவி, வறண்ட நிலத்திற்கு மழையைக் கொண்டுவரும் மேகங்கள், பெரிய பள்ளத்தாக்குகளை செதுக்கும் ஆறுகள் மற்றும் சூரியனை முழுவதுமாக பிரதிபலிக்கும் பனித்துளிகள்.

ஐக்கியம் அடைந்தபின் பல விஷயங்கள் நிகழக் கூடும். இணைவதற்கு முன் ஹைட்ரஜன் மற்றும் ஆக்ஸிஜனாக இருந்த அவற்றால், இதுவரை இல்லாத அல்லது இருக்கப்போகின்ற அளவைவிட, அதிக அளவில் நீரை உருவாக்க முடியும். இசையின் சங்கமம் தொடங்கவிருக்கின்றது, அதில் எல்லா வகையான மெல்லிசையும் எழக் கூடும்.

இரண்டு மகத்தான வெறுமைகள் இணைந்தால் என்ன நிகழும்? அதற்கு தர்க்கரீதியான பதில், ஏதுமற்றதாக இருக்கும் என்பதுதான். ஆனால் அந்த ஏதுமற்றது என்பது, பூஜ்ஜியத்திற்கு இணையானது அல்ல. அனந்தம் என்பது ஒரு கணிதவியல் கோட்பாடு. அதன்படி அனந்தத்துடன் அனந்தத்தை சேர்த்தால், அதன் கூட்டுத்தொகை "இரண்டு அனந்தங்கள்" என்பதற்கு மாறாக, அனந்தம் என்பதாகவே இருக்கும்.

கணித மேதைகள், வெவ்வேறு அளவிலான அனந்தம் இருப்பதைக் கண்டறிந்தபோது, அவர்கள் ஒரு ஆழமான ஆன்மீக உண்மையை உணர்த்தினர். ஐக்கியநிலையைக் கடந்தபின், அங்கு எண்ணற்ற விஷயங்கள் இருப்பது மட்டுமல்லாமல், எண்ணற்ற அனந்த நிலைகளும், அவை ஒவ்வொன்றும் வேறுபட்டதாகவும், மற்ற அனைத்தையும் உள்ளடக்கியதாகவும் இருக்கும். அதனால்தான் ஐக்கியநிலையைக் கடந்தபின் ஆன்மீகப் பயணம் முடிவடைவதில்லை.

நான் உங்களிடம் கூற விரும்புவது இதுதான். நீர்த்துளி சமுத்திரமாக மாறுவதில்லை. நீர்த்துளி, தான் எப்போதும் சமுத்திரமாகவே இருந்துள்ளதை உணர்கின்றது. ஆனால் இந்த உணர்வு, அனந்தம் எனும் பல்கலைகழகத்தில் முதல்நாள் வகுப்பு மட்டுமே. இதற்கு அப்பால் என்ன உள்ளது?

அதற்கும் அப்பால் சென்று பயணித்தவரால் மட்டுமே, அதைக் கூற முடியும். அவர்கள் திரும்பி வந்ததும், வார்த்தைகளைவிட மௌனமே ஆழமாக ஒலிக்கக் கூடியது என்பதையும், போதிப்பதைவிட அந்த சூழலில் இருப்பதே அதிகமாக கற்றுத் தரும் என்பதையும், அதிஉன்னத சக்தி என்பது சக்திகள் எதுவும் அற்றநிலை என்பதையும் கற்றுக்கொள்கின்றனர். அன்புதான் அத்தகைய சக்தி என்பதை உணர்கின்றனர். ஹைட்ரஜன் மற்றும் ஆக்ஸிஜன், ஒன்றினுள் ஒன்று கரைந்து, மறுபடியும் உயிர்ப்பித்து வரும் நித்திய விளையாட்டு அது.

விஷயங்களை சிறுசிறு பகுதிகளாகக் காண்பதில் உள்ள மாயாஜாலம் இதுதான். இது பாதையைக் கடந்து பயணிப்பதற்கான பாதையாகும். அதனால்தான் 'ஐக்கியநிலையை அடைந்த பின்னர் என்ன நிகழ்கிறது' என்று நீங்கள் கேட்கையில், என்னால் சிரிக்க மட்டுமே முடிகிறது. நீங்கள் எதுவும் சொல்ல வேண்டிய அவசியமில்லை; நீங்களே அதற்கான பதிலாக மாற வேண்டும்.

சமுத்திரமாக மாறுவது இலக்கு அல்ல.
நீங்கள் ஒருபோதும் ஒரு துளி அல்ல
என்பதை உணர்வதுதான் முக்கியம்.
தன்னை ஒரு துளி என்று எண்ணியிருந்த
நீங்கள் எப்போதும் அந்த சமுத்திரமாகவே
இருந்தீர்கள். ஆனால் இந்தப் புரிதல்
மட்டுமே முடிவல்ல, அது உண்மையான
மாற்றத்திற்கான ஒரு தொடக்கம்தான்.

நீங்கள் அந்த நிலையை அடையும்போது, மாஸ்டர்கள் ஏன் எதையும் கூறுவதில்லை என்பதை நீங்கள் புரிந்துகொள்வீர்கள். அவர்கள் ஒரு கண்ணாடிக் கோப்பையில் உங்களுக்கு நீரை அளித்துவிட்டு, அது எவ்வளவு மகத்தானது என்பதை நீங்கள் உணர்வதற்காக காத்திருக்கிறார்கள். நீங்கள் அந்தக் கோப்பையைக் கையில் வைத்திருக்கும்போது, ஹைட்ரஜனும் ஆக்சிஜனும், எவ்வாறு வேறு ஒன்றாக மாறியுள்ளது என்று எண்ணிப் பாருங்கள். நீங்கள்தான் சமுத்திரம், அதன் தூய்மை நிலையைக் கண்டு நீங்கள் வியப்படைகிறீர்கள். நீங்கள்தான் தெய்வீகம், அதன் திருவிளையாடலைப் புரிந்துகொள்வதற்கு மெல்ல விழித்தெழுகிறீர்கள்.

அந்தப் புரிதலில், மிகவும் அற்புதமான ஒன்று நிகழ்கிறது: மிகவும் சாதாரணமான ஒன்று புனிதமாகிறது, வேறு ஏதோ ஒன்றாக மாறுவதினால் அல்லாமல், அது எப்போதும் என்னவாக இருந்தது என்பதை உணர்வதினால் அது நிகழ்கிறது.

அனைத்து ஐக்கியமடைதலுக்கும் அப்பால் உள்ள, மகத்தான நிசப்தத்தில், சரியான பாதையைத் தேர்ந்தெடுப்பதற்கான ஞானத்தை, அவர் நமக்கு அருளட்டும்.

மகோன்னத மாஸ்டரிடம் பிரார்த்தனைகளுடன்,

கம்லேஷ்

# குறிப்புகள்

